# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 6 ஜூலை 1998 கனி 12

ஆசிரியர்
B.அர்ஜுனன்

## ஆசிரியர் கடிதம்

அன்பான வாசகர்களுக்கு,


உங்கள் சகோதரனும், கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய அர்ஜூனன் எழுதும் கடிதம்.

வாழ்த்துக்கள். தொடர்ந்து எமது இதழைப் பெற்று வருவீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். அநேகருடைய கடிதங்களைப் படித்து சந்தோஷமடைகிறேன். தொடர்ந்து உங்களுக்காக வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் ஜெபித்து வருகிறார்கள். பலருக்கு இவ்விதழைக் கொடுத்து ஆத்தும இரட்சிப்பிற்கு உதவி செய்யுங்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே இதழை அனுப்ப விரும்புகிறோம். முகவரிகளை ஆங்கிலத்தில் பின்கோடுடன் எழுதி அனுப்புங்கள்.

உங்கள் இல்லத்தில் குடும்ப ஜெபக்கூட்டங்கள் அல்லது வேத ஆராய்ச்சி வகுப்புகள் நடத்த விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன்
ஆசிரியர்.

### பார்வையற்றோர்க்கு ஓர் நற்செய்தி



பிரையில் (BRAILE BIBLE COURSE) முறையில் பைபிள் பாடங்களை தபாலில் படிக்க அன்புடன் அழைக்கின்றோம். வாசகர்களே, தயவுகூர்ந்து நீங்கள் அறிந்த பார்வை யற்றவர்களுக்கும் இதை அறிமுகப்படுத்த வேண்டுகிறோம்.

*தொடர்பு முகவரி :*

**DIRECTOR,** BRAILE BIBLE COURSES, *P.O. BOX. NO.2*
*ELLIS NAGAR*, MADURAI - 625 010.

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS**
*POST BOX NO. 5, BATLAGUNDU - 624 202*
**SOUTH INDIA.**

# கிறிஸ்துவின் வசனம்


## WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 ஜூலை 1997 கனி 12


ஆசிரியருரை

## ஆவிக்குரிய பிறப்பு
## Spiritual Birth



இவ்வுலகில் பிறந்த நாம் ஏதோ ஒருவகையில் கஷ்டப்படுகிறோம். ஏன் இந்த சரீரத்தில் இத்தனை பாடுகள், பிரச்சனைகள் வருகிறது என்று கலங்கி தவிக்கும் மக்கள் ஏராளம். தேவன் நமக்கருளிய பரிசுத்த வேதாகமத்தில் இப்படியாக வாசிக்கிறோம். “ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்” (யோபு 14:1). அப்படியே தான் நடந்து வருகிறது. இதிலிருந்து விடுதலை இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். ஏன் இல்லை? விடுதலை உண்டு. எப்படியென்றால் ஆவிக்குரிய பிறப்பை நீங்கள் பெறும் போது நிச்சயமாக விடுதலை ஆவீர்கள். அப்பொழுது மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்வீர்கள்.

இந்த ஆவிக்குரிய வாழ்வைப் பெற்றுக் கொள்ள பரிசுத்த வேதாகமத்திற்கு முதலாவது திரும்புங்கள். “இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை” (பிரசங்கி 12:7). நமது சரீரம் மண்ணாக இருக்கிறது. மண்ணிலிருந்து எடுக்கப்பட்டபடியால் மண்ணுக்கே திரும்புகிறது. இந்த சரீரம் மண்ணுக்குப் போவதற்கு முன் உன் வாலிபப் பிராயத்திலே தேவனை நினைத்து அவர் கொடுக்கிற ஆவிக்குரிய வாழ்வை நீ பெற்றுக் கொள்ள வேண்டும். கெட்ட பின் தான் புத்தி வரும் என்பார்கள். ஆனால் நீ மரித்தபின் உனக்கு புத்தி வந்தால் ஒரு பிரயோஜனமும் இருக்காது. ஐசுவரியவான் மரித்து பாதாளத்திலே வேதனைப்படும் போது புத்தி வந்து ஆபிரகாமைப் பார்த்து எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. இவ்விடத்திற்கு வராதபடி லாசருவை அவர்களுக்கு சாட்சியாக என் தகப்பன் வீட்டிற்கு அனுப்பும் என்றான். ஆபிரகாமோ, மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களுக்கு செவி

கொடுக்கட்டும் என்றான் என்று லூக்கா புத்தகத்தில் வாசிக்கின்றோம். நீ இந்த பூமியிலிருக்கிற நாட்களில் தேவனைத் தேடி ஆவிக்குரிய வாழ்வைப் பெற்றுக்கொள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய பிறப்பைக் குறித்துச் சொல்லும் போது, "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவான் 3:3). மறுபடியும் எப்படி பிறப்பது? தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாம் தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ? என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பலாம். மறுபடியும் பிறப்பது என்பது ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்கக் கூடிய ஒரு செயல். ஜலத்தினால் என்று சொல்லும் போது தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதைக் குறிக்கிறது. ஆவியினால் என்று சொல்லும் போது ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கிற ஒரு ஜீவியம். பழைய செயல்களை ஒழித்து பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய வசனங்களை ஏற்று நடத்தல் அதாவது "முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (எபேசியர் 4:22-24) என்பதைக் குறிக்கிறது.

ஆவிக்குரிய பிறப்பு பாவத்திற்குச் செத்து நீதிக்குப் பிழைப்பதாகும். "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவான் 8:51). ஆண்டவருடைய வார்த்தையை ஒருவன் கைக்கொண்டு அதின்படி நடக்கும்போது அவனுக்கு மரணமே இல்லையென்று பார்க்கிறோம். அப்படியானால் கிறிஸ்தவர்கள் ஏன் மரிக்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? அது ஆவிக்குரிய மரணம் அல்ல, சரீர மரணமே. மேலும் கர்த்தர் குறிப்பிடும் போது "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25). ஆம், பிரிய நண்பரே! அவரை விசுவாசிக்கிறவன் நிரந்தரமாக மரித்துப் போவதில்லை. அவரை விசுவாசிக்கிறபடியால் ஆவிக்குரிய சரீரத்தோடு மறுபடியும் பிழைப்பான். இது எப்படியாகும்? எப்பொழுது நடக்கும் என்று கேட்கிறீர்களா? "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனை கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது " என்றார்

(யோவான் 6:40). ஆண்டவராகிய இயேசு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இவ்விதமாக அவரை விசுவாசிக்கிற யாவரையும் உலகத்தின் முடிவில் எழுப்புவார். அதுமாத்திரமல்ல அழியாத ஜீவனைக் கொடுத்து அழியாத ராஜ்யத்துக்குள் கொண்டு செல்வார்.

ஆவிக்குரிய பிறப்பு ஒரு அனுபவம் அல்ல. அது வேத வசனத்தின்படி பிறக்கும் ஒரு செயல். ஆண்டவர் இயேசுவைக் கேள்விப்பட்டு விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரால் சபையில் சேர்க்கப்படுவது. மேலும் ஆவியினால் பிறந்த மனுஷன் ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்க வேண்டும். "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலாத்தியர் 6:22,23). இவைகளைக் கொடுக்காமலிருந்து கொண்டு நான் ஆவிக்குரிய சபைக்குச் செல்லுகிறேன், நான் வரம் பெற்றவன், மறுபிறப்பு அனுபவம் உள்ளவன் என்று கூறினால், எப்படி? ஆண்டவர் குறிப்பிடும் போது "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" (யோவான் 3:6). இவ்வசனத்தில் எவ்வித சந்தேகமுமில்லை. நீங்கள் எப்படியோ, அப்படியே இருப்பீர்கள். "தன் மாம்சத்திற்கென்று விதை விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்" (கலாத்தியர் 6:8). இப்பொழுது உங்களை நீங்களே சீர்தூக்கிப் பாருங்கள். எதற்கென்று விதை விதைக்கிறீர்கள்?

பிரியமான சகோதரனே! சகோதரியே! உன் நிலைமை என்ன? நீ ஆவிக்குரிய பிறப்பை பெற்றுள்ளாயா? அல்லது உன் மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? இன்றே இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள். ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு. அப்பொழுது ஆவிக்குரிய பிறப்பைப் பெற்றுக்கொண்டவனாயிருப்பாய். "மனதின் யோசனைகள் மனுஷனுடையது; நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும். மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்" (நீதி.16:1,2). இந்த தேவனுக்கு உன்னை ஒப்புக்கொடு. ஸ்திரீயினிடத்தில் பிறந்த நாம் வாழ்நாள் குறுகினவர்களும், சஞ்சலம் நிறைந்தவர்களுமாயிருக்கிறோம் என்று பார்த்தோம். ஆனால் ஆவிக்குரிய பிறப்பை பெறும் போது உன்னதமான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், மறுமையில் நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்வோம். நீங்கள் ஆவிக்குரிய பிறப்பைப் பெற்று ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர கர்த்தர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான் (1 கொரி.2:15)



# ஒருபோதும் அடிபணியாதே
## (Don't ever Surrender)

*J.C.CHOTE*

உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. (1 யோவான் 5:19). எங்கும் இருள், எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி விட்டனர். ஆகையால் மனிதன் தோல்வியடைந்து நம்பிக்கையை இழந்துவிட்டான். சாத்தான் இவ்வுலகத்தின் அதிபதியாக இருந்து கொண்டு எல்லாவற்றையும் அடக்கி ஆளுகிறான்.

சாத்தானோடு கூட நேர்மையற்ற காரியங்களும், தீமைகளும் மனிதனுடைய இருதயத்தில் தோன்ற ஆரம்பித்துவிட்டது. பொய்யன், வஞ்சகன் என வர்ணிக்கப்படுகிறவனே சாத்தான், அதாவது தீமை என்ற ஒன்றாகும் (யோவான் 8:44). அநேகர் பலவிதமான பாவங் களுக்கும், கெட்ட பழக்க வழக்கங்களுக்கும் தங்களை ஒப்புவித்து அதன் விளைவாக அதே தீமைகளையே அறுவடை செய்கின்றனர். இப்படிப்பட்ட அநேக போராட்டங்களும், பாவங்களும்., தீமை களும், வருத்தங்களும் உலகத்திலிருப்பது ஆச்சரியமானதா?

ஒருகாலத்தில் "கிறிஸ்தவ தேசம் " என அழைக்கப்பட்ட அமெரிக்காவிலும் கூட பாவம் ஆளுகை செய்கிறது.பாதி திருமணங்கள் விவாகரத்தில் முடிகிறது. மூன்றில் ஒரு பகுதி குழந்தைகள் கருவிலே கொல்லப்படுகின்றன. நான்கில் ஒரு பகுதி பிறப்பு முறைகேடான முறையில் பிறக்கின்றன. கற்ப்பழித்தலும் , துஷ்பிரயோகமும் முறிந்து போன குடும்பங்களில் சாதாரணமான காரியமாகிவிட்டது. இழந்துபோன இல்லங்கள், குடும்பங்கள் மூலம் தேசத்தினுடைய சிறந்த அமைப்பு நாசமாகிவிட்டது. ஒரு மாற்றம் விரைவில் வராவிட்டால் நிச்சயமாகவே தேசம் மோசமாகிவிடும்.

அமெரிக்கா மாத்திரம் இப்படிப்பட்ட இக்கட்டான பிரச்சனைகளோடிருக்கவில்லை. உலகமுழுவதிலும் பாவம் மனிதனுக்குள்ளும், சமுதாய வாழ்விலும், குடும்பத்திலும், சமயத்திலும், அரசியலிலும், வியாபாரத்திலும் ஆளுகை செய்கிறது. மனிதன் பதவி ஆசையுள்ளவனாயிருக்கிறான். லஞ்சம், நேர்மையற்ற தன்மை போன்றவைகள் அவசியமானதாக ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டிற்குள்ளும், தேசங்களின் மத்தியிலும் சண்டைகள்

எழும்புகின்றன. அதன் விளைவாக வலிமையுள்ள நாடுகளால் வலிமையற்ற நாடுகள் ஒடுக்கப்படுகின்றன. இவை பட்டினியையும், மரணத்தையும், அழிவையும் கொண்டு வந்து சமாதானத்தை ஆவலுடன் தேடியும் அது கிடைப்பதற்கு அபூர்வமான சூழ் நிலையை ஏற்படுத்துகிறது.

தேவபக்தி நிறைந்த உலகத்திலும் கூட நேர்மையற்ற தன்மை இருக்கிறது. அநேக தவறான சமயங்களும், எண்ணற்ற கள்ள போதகர்களும் இருக்கின்றனர் (மத்தேயு 24:24). அதிகமானோர் மனித கொள்கைகளுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து வீணிலே தேவனை ஆராதிக்கின்றனர். மிக அதிகமானோர் நித்திய அழிவுக்கு நேராய் நடத்திச் செல்லுகிறதான விசாலமான பாதையில் செல்லுகின்றனர்.

உலகத்திலுள்ள இத்தகைய தவறான காரியங்களோடு, எளிதில் உண்மையைத் தெரிவிப்பதற்கு மாறாக, குழப்பத்தை ஏற்படுத்தி, சாத்தானுக்கும், அவனது மாபெரும் சேனைக்கும் ஒப்புவிக்க நம்மை ஆயத்தப்படுத்திவிடும். இதனால் என்ன பயன்? என்ற உணர்வையும் ஏற்படுத்தக்கூடும். நமக்கு விரோதமான காரியங்கள் மிக அதிகம். முடிவாக, கடைசியில் எல்லாப் போராட்டங்களுக்கும் பின்பு நாம் தோல்வியடைந்துவிடுவோம்.

ஆனால் இதோ இன்னும் நம்பிக்கை உண்டு.

பரலோகத்தின் தேவன் இவ்வுலகத்தின் அதிபதியைக் காட்டிலும் பெரியவர். நாம் தயை இழந்துபோதிலும், தகுதியற்ற நிலைக்குள்ளான போதிலும், நித்திய சிருஷ்டிகர் இரக்கமுடையவராக இருந்தார். கீழ்ப்படிகிறவர்களை இரட்சிக்கும்படியாக பாவம் நிறைந்த மனிதனுடைய இடத்தில் தன்னுடைய குமாரன் சிலுவையில் மரிக்கும்படி அவரை இந்த உலகத்திற்கு அனுப்பினார். நாம் இயேசுகிறிஸ்துவின் மூலம் பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொள்ள முடியும். அவர் அவரது குடும்பத்தில் அதாவது அந்தகார லோகாதிபதிகளோடும், அவனது சேனைகளோடும் எதிர்த்துப் போராடும்படியான ஆவிக்குரிய போராட்டத்தை மேற்கொள்ளும் அவரது சேனையில் நம்மை சேர்த்துக் கொள்வார்.

கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு கஷ்டமான வாழ்க்கை எனக் கருதப்பட்ட போதிலும், சாத்தான் கொடுப்பதைக் காட்டிலும் இது மிக அதிகமாகக் கொடுக்கிறது. நாம் ஒருவேளை சிறுபான்மை யினராக இருக்கலாம். ஆனால் அவர் எப்போதும் நம்மோடி ருக்கிறார் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கிறோம் (மத். 28:20).

நாம் நமக்கு உதவி செய்யும்படி கூப்பிடத்தக்க ஒரு பிதாவை யுடையவர்களாய் இருக்கிறோம் . நாம் நமது சகோதரனையும், உடன் விசுவாசிகளையும் நம்மோடு சேர்ந்து உலகத்தை எதிர்த்துப் போராடும்படி பெற்றிருக்கிறோம். நாம் நம்மை வழிநடத்தும்படி தேவனுடைய வார்த்தையையும், நம்மை வழுவாமல் நிலைநிறுத்தும் படி கிறிஸ்துவுக்குள் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக என்றென்றைக்கும் கர்த்தரோடு கூட அந்த புதிய உலகத்தில் நித்திய வாழ்வை பெறுவோம் என்ற நம்பிக்கையையும் பெற்றிருக்கிறோம்.

என்னுடைய விருப்பம், நம் அனைவருக்கும் இருக்க வேண்டியது நாம் ஒருபோதும் விட்டுக் கொடுத்து, வழிவிலகி, அவிசுவாசமுள்ளவர்களாக மாறி அல்லது சாத்தானுக்கு நம்மை ஒப்புக்கொடுத்தவிடக் கூடாது. நாம் கண்டிப்பாக சிந்திக்க வேண்டியது: முடிவில் ஜெயங்கொள்ளும்படியாக கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றிருக்கிறோம். எப்பேர்ப்பட்ட துன்பங் களும் வேதனைகளும் நம் வாழ்வில் அனுபவித்தாலும் பரவா யில்லை. எத்தனையோ பாடுகளையும், போராட்டங்களையும் சந்தித்தாலும் கிறிஸ்தவனுக்கு வெற்றி நிச்சயமே. இதை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது.

ஆகிலும், நாம் நம்மை பரிசுத்தமாகவும், தேவபக்தியில் நிலைத்து தேவனுக்காகவும், சத்தியத்திற்காகவும் உறுதியாக நின்று சுவிசேஷத்தை உலகிற்கு பிரசங்கித்து, உண்மையுடன் அவரைத் தொழுது கொண்டு அவருக்கு எப்பொழுதும் ஊழியம் செய்ய வேண்டும். சரீரப்பிரகாரமான வாழ்விலே ஒவ்வொரு நாளும் ஏற்படும் பாடுகளிலும் கூட அவர் நம்மை ஆசீர்வதித்து உதவி செய்வார். அவரோடு இருக்கும்படியான வரப்போகும் நித்திய வீட்டையும் இவ்வுலகத்திலே வாக்குப்பண்ணியிருக்கிறார் (வெளி. 2:10). அப்போஸ்தலனாகிய பவுல் "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" (ரோமர் 8:18) என்றார்.

அவரோடு நாமும் கிறிஸ்துவின் நாமத்திலே ஆமென் ஆமென் என்று கூறுவோம்.

> தேவனுக்குக் கீழ்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் (யாக்கோபு 4:7).

பெண்கள் பகுதி



# ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்துவார்

## God will exalt you in due time

*J. குளோரி அர்ஜுனன்*

அன்பான சகோதரிகளே, இத்தலைப்பினை வாசிக்கிற உங்களுக்கு இது ஆறுதலாக இருக்கும் என எண்ணுகிறேன். ஏனெனில் சகோதரிகளாகிய நமக்கு வீட்டிலும், சமுதாயத்திலும், வேலை செய்கின்ற இடங்களிலும் நிந்தனைகள், வேதனைகள், போராட்டங்கள், பரிகாசங்கள் போன்ற அநேக பிரச்சனைகள் எழலாம். எல்லாவற்றிற்கும் மத்தியில் நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. ஆம், உண்மையாய் அவரை நோக்கி கூப்பிடுவோமேயானால் நிச்சயமாகவே தேவன் நமக்கு பதிலளிப்பார். கிறிஸ்துவை உண்மையாய் பற்றிக் கொண்டவர்களை ஏற்ற காலத்தில் உயர்த்துவார்.

ஏற்றகாலத்திலே தேவன் நம்மை உயர்த்தும்படிக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? *1 பேதுரு 5:6*-ல் இவ்விதமாக வாசிக்கிறோம். "ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." ஆம், அவரது பலத்த கைக்குள் அடங்கியிருக்கும்போது இப்பேர் ஆசீர்வாதங் களைப் பெற முடியும். அவரது பலத்த கைக்குள் அடங்கியிருப்பது என்பது அவரது விருப்பத்திற்கு இசைந்து கொடுத்தவர்களாய் நம்மை தாழ்த்தி அவருக்கு நம்மை ஒப்புவிப்பதாகும்.

"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று யாக்கோபு 4:10-ல் அப்போஸ் தலனாகிய யாக்கோபு கூறுகிறார். பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் அன்னாள் என்ற சகோதரியைப் பற்றி வாசிக்கிறோம். இவள் ஒரு உத்தம ஸ்திரீ. தன் சக்களத்தி தன்னைத் துக்கப்படுத்தும்படியாக மிகவும் விசனப்படுத்தினாலும் எதிர்த்து பேசாமல், அவள் மீது கோபம் கொள்ளாமல் தன் தேவனை நோக்கி மாத்திரம் விண் ணப்பம் செய்கிறவளாயிருந்தாள். "அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி : சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி ..." என தன்னைத் தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிறாள் *(1 சாமுவேல் 1: 10-11)*.

தன் வீட்டில் அவளது சக்களத்தி இகழ்ந்தாள். கர்த்தருடைய சந்நிதியில் வந்து அவள் விண்ணப்பம்பண்ணின போதோ "ஏலி அவளை நோக்கி : நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னைவிட்டு விலக்கு" என்றான் (1 சாமுவேல் 1:14). வெந்த புண்ணைக் கீறுவது போல இது இவளுக்கு வேதனைஅளித்திருக்கக் கூடும். இருந்தபோதிலும் இவ்விடத்திலும் கோபம் கொள்ளாது, "அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக : அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ, நான் திராட்சரசமாகிலும், மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்" என்று கூறுகிறாள். கர்த்தர் அவள் விண்ணப்பத்தைக் கேட்டு அவளை நினைத்தருளினார்.

ஆம், அன்பான சகோதரிகளே, நமக்கும் எத்தனையோ வகைகளில் மனக்கிலேசங்கள் இருக்கலாம். இந்த அன்னாளைப் போல யாரிடமும் கோபம் கொள்ளாது நம்மைக் கர்த்தரிடம் ஒப்படைத்து தாழ்த்துவோம். நம் வேதனைகளை, துன்பங்களை மற்ற ஜனங்களிடம் பகிர்ந்து, வேதனையைக் கூட்டிக் கொள்ளாமல் நம் இருதயத்தை கர்த்தருக்கு முன் ஊற்றிவிடுவோம். அப்பொழுது நிச்சயமாகவே தேவன் நம்மை நினைத்தருளுவார். நம் சிறுமையை நோக்கிப் பார்ப்பார். "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்" (1 சாமுவேல் 2:8).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையும் கூட இகழ்ந்து பேசினர். ஆனால் அவரோ பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படி வாய்திறவாத ஆட்டைப் போலிருந்தார். "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆனால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி . . . எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என்று பிலிப்பியர் 2:8-9-ல் வாசிக்கின்றோம்.

ஆகவே அன்பான சகோதரிகளே, நாமும் கூட வேதனைப்பட்டு நம்மை நாமே உருவக்குத்தி கொண்டிராமல் நம் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, அவரது பலத்த கைக்குள் அடங்கி, அவரது சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, அன்னாளைப் போல தேவ சமூகத்தில் நம் இருதயத்தை ஊற்றிவிடுவோம். கிறிஸ்துவை நம் மாதிரியாகக் கொள்வோம். கர்த்தர் நம் சிறுமையை நோக்கிப் பார்த்து ஏற்றகாலத்திலே நம்மை உயர்த்துவார்.

# இம்மாத வேத அறிவுப்போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் இறுதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. கர்த்தருடைய ஆலயபிரதிஷ்டைக்கு சாலொமோன் கர்த்தருக்கு சமாதானபலிகளாக எத்தனை மாடுகளையும், ஆடுகளையும் பலியிட்டான்?
2. யாருடைய வேர் கனி கொடுக்கும்?
3. ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தை தேடாமல் யாருடைய பிரயோஜனத்தை தேடக்கடவன்?
4. ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் என்ன உண்டாகும்படி செய்யுங்கள்?
5. மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் எப்படிப்பட்டவர்களாக எண்ணக்கடவீர்கள்?
6. மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர் யார்?
7. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை என்ன செய்வார்?
8. ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் எதற்குத் தன் நாவையும், எதற்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும்?
9. அப்போஸ்தலர்களில் திருடனாயிருந்தவன் யார்?
10. ஆவிக்குரிய பிறப்பு என்பது ஒரு அனுபவத்தில் பிறப்பதா? அல்லது செயலில் பிறப்பதா?

> உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்!
> நான் முழுவதும் அது என் தியானம்.
>
> - சங்கீதம் 119:97.

## ஜூன் மாத இதழின் விடைகள்

1. ஆகாசுடைய – ஏசாயா 38:7.
2. மூடன் – பிரசங்கி 10:15.
3. நரகத்திலே – சங்கீதம் 9:17.
4. அறியவில்லை – யோவான் 1:10.
5. பவுல் – 2 கொரி. 12:20.
6. தேவனால்
7. சவுலை, சாமுவேல்
8. கிறிஸ்து
9. எண்ணப்படும்
10. சீமோன்

## ஜூன் மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | R.குமரேசன் | – | செட்டிபாளையம். |
| 2. | R.ரகுபதி | – | செட்டிபாளையம் |
| 3. | R.ஜெபர்சன் ஜேக்கப் | – | ஐரேனிபுரம் |
| 4. | D.ஜாய் பிரிஸ்கில்லாள் | – | கள்ளிக்குடி |
| 5. | J.மேரி எலிசபெத் கலைவாணி | – | வத்தலக்குண்டு |
| 6. | மேரியம்மாள் | – | வத்தலக்குண்டு |
| 7. | P.ஏசையன் ராஜ் | – | கோபி |
| 8. | M.சேகர் | – | மோதுப்பட்டி |
| 9. | S. ராஜு | – | செட்டிபாளையம் |
| 10 | .D.சிவசாமி | – | செட்டிபாளையம் |
| 11. | J.ரவிச்சந்திரன் | – | செட்டிபாளையம் |
| 12. | R.ரவிச்சந்திரன் | – | செட்டிபாளையம் |
| 13. | P. இளங்கோவன் | – | நிமிந்தப்பட்டி |
| 14. | S.வின்செண்ட் | – | கன்னன்குளம் |
| 15. | D.அருள்மணி | – | கன்னன்குளம் |
| 16. | G.அன்னலட்சுமி | – | பழத்தோட்டம் (கன்னியாகுமரி) |

## உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் மக்கள் தொகை ஒவ்வோர் ஆண்டும் பதின்மூன்று மில்லியன் கூடுதல் அடைகிறது.

கி.பி. 2001-ல் இந்தியாவின் மக்கள் தொகை ஆயிரத்து ஐம்பத்தொன்பது மில்லியன் ஆகிவிடும் எனக் கூறப்படுகிறது.



நமது நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக இருநூற்று இருபது இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன.

உலகில் ஒவ்வோர் ஆண்டிலும் மக்கள் தொகை ஏறக்குறைய ஏழரைக்கோடி அதிகரித்துக் கொண்டே போகிறது.

# நான் யார்?

## Who Am I?



1. நான் ஒரு அழகான இளம் யூதப் பெண். அபியாயேலின் குமாரத்தி.
2. "பகைமை மாறா செடியில் பூக்கும் இனிய மணங்கமழும் வெள்ளைப் பூ" என அர்த்தங் கொள்ளும் எனது பெயர் அத்சாள். பெர்சியா பாஷையில் என் பெயர் 'நட்சத்திரம்' எனப்படும்.
3. நான் வாழ்ந்த நாட்களில் யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர்.
4. சூசானிலிருந்து கொண்டு இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள 127 நாடுகளையும் அகாஸ்வேரு ராஜா அரசாண்டு வந்தான்.
5. என் சகோதரன் பென்யமீனியனாகிய கீசின் குமாரன் சீமேயினுடைய மகனாகிய யாவீரின் குமாரன் நேபுகாத்நேச்சாரால் எருசலேமிலிருந்து பிடித்துக் கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவனாயிருந்தான். என் தாய் தகப்பன் இருந்த பொழுது என் சகோதரன் என்னைத் தன் குமாரத்தியாக எடுத்துக் கொண்டான்.
6. அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் மூர்க்கம் நிறைந்தவனாய் என் சகோதரனை பகைத்து, என் சகோதரனோடு ஜனங்களெல்லாரையும் சங்கரிக்க வகை தேடினான்.
7. கடிதம் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தால் முத்திரையிடப்பட்டு ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாம் தேதியிலே சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும் அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது.
8. நான் என் சகோதரனிடம் யூதரையெல்லாம் கூடிவரச்செய்து மூன்று நாள் எனக்காக உபவாசம் பண்ணுங்கள் எனக் கேட்டுக் கொண்டேன்.
9. அம்மெதாத்தாவின் குமாரன் மொர்தெகாய்க்கு ஆயத்தம் பண்ணின தூக்குமரத்தில் தூக்கிப் போடப்பட்டான்.
10. கர்த்தருடைய உதவியால் என் துணிச்சலின் மூலம் என்னுடைய ஜனங்கள் காப்பாற்றப்பட்டனர்.

**MONTHLY MAGAZINE**

Regd. No. 84661 - 92

Postal Regn.No.TN/DDL/19

Edited by B.Arjunan on behalf of Church of Christ

2.2.102-D/5 Rajan Nagar

*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*

**BATLAGUNDU - 624 202.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்

ஞாயிறு காலை *9.00* மணி

வியாழன் மாலை *6.45* மணி



**கிறிஸ்துவின் சபை**

*2.2.102–D/5 ராஜன்நகர்*

வத்தலக்குண்டு - 624 202

திண்டுக்கல் மாவட்டம்.

Phone: (04543) 23278

From

**WORD OF CHRIST**

*POST BOX NO.5*

**BATLAGUNDU - 624 202**

*S.INDIA.*

To